# உதயமிமித்ரா போர்ட்டல் (www.udyamimitra.in)
# நிதி மற்றும் அல்லாத நிதி சேவைகள் உள்ளடக்கிய அணுகல்

ஸிட்பி (எஸ்ஐடிபிஐ) தன்னை எம்எஸ்எம்இ நிறுவனுங்களுக்கான முக்கிய ஒரு நிதி நிறுவனமாக அமைத்துக் கொண்டு, அமைப்பு சார்ந்த தீர்வுகளின் உதவியினால் அனைவருக்கும் உதவி புரிந்து வருகிறது. பல இணையதளங்களை உள்ளடக்கி எண்சார் (டிஜிட்டல்) முயற்சிகளை மேற்கொண்டு மகிழ்ச்சியளிக்கும் வகையில் sidbi.in,smallB.in,sidbistartupmitra.in standupmitra.in போன்ற இணையதளங்களை அமைத்து, அதன் தொடர்ச்சியாக ஸிட்பி www.udyamimitra.in என்பதனை நிறுவி, அது அனைத்து நிறுவன கடனுக்காகவும் ஒரு இடைவினை (இண்டராக்டிவ்) வலைப்பக்கமாக விளங்கச் செய்துள்ளது. ஸிட்பி, நிதி மற்றும் நிதி சாராத சேவை நிறுவனத் தேவைகளுக்காக அவை எளிதில் அணுகுவதையே நோக்கமாகக் கொண்டு, ஸ்டாண்ட்-அப் மித்ரா தளத்தின் தொழில்நுட்ப கட்டமைப்பை நன்று உபயோகித்து, ஒரு செயல்பாட்டுத் தளமாக இதனை விளங்கச் செய்துள்ளது.

## A முதல் E வரையில் (இ-தளத்தை அணுகுதல்)

- **இந்தியா முழுவதிலும் எந்த வகை நிறுவனமும், எந்த நேரத்திலும், எந்த இடத்திலிருந்தும் கடனுக்காக அணுகலாம்**
- **வியாபார நுணுக்கங்கள் மற்றும் அறிவுசார் எண்ணங்களின் குவியல் small.in என்ற இணையதளத்திலிருந்தும் மற்றும் வர்த்தக முன்னணியாளர்களின் மூலமாகவும் பெற்று, பரஸ்பர நம்பிக்கைத் தன்மையை வர்த்தகத்தில் ஆர்வமுள்ளவர்களிடையே உண்டாக்குதல்**
- **கடனுதவி இணைப்பு - 1.25 லட்சம் வங்கிக் கிளைகளுடன் மற்றும் 17000க்குக் கூடுதலான வழிகாட்டும் முகவர்களுடனும்**
- **தீர்வுகள் - சுய-மதிப்பீடு (பயிற்சி/தயார் நிலை/திட்டங்கள்), விரும்பிய வங்கிகளைத் தேர்ந்தெடுத்தல் - 3 வங்கிகள்**
- **செயலுக்கான உந்துதல்**

✓ **கடன் சந்தை - விரிவான வாய்ப்பை அளித்தல் - வங்கிகள் - கண்டு, தேர்ந்தெடுத்து, மதிப்பீடு செய்யும் - எல்லா வங்கிகளும் தேர்ந்தெடுக்கலாம்**

✓ **அனைத்து வங்கிகளும் ஏற்றுக் கொள்ளக் கூடிய நிலைப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள்**

✓ **வெளிப்படை மற்றும் உடன் பதிலளிக்கும் தன்மை - தனிப்பட்ட விண்ணப்பங்களின் நிலையறிதல் வசதி - எழுப்பும் வினாக்களுக்கான பதில் பற்றிய உத்தரவாதம்**